DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.159/20

Deposition of Witness: PW 3

| | |
|---|---|
| Name வெங்கடேஷ் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.08.2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் அல்லிநகரத்தில் குடியிருக்கிறேன். நான் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அசா1 என் அக்காவின் கொழுந்தனர். அசா2 என் அக்கா. சம்பவத்தில் இறந்துபோன ராஜசேனாபதி என் அக்காவின் கணவர். அவர் கடந்த 2.2.20ம் தேதி காலை சுமார் 8.30மணிக்கு வழக்கம்போல் வேலைக்கு செல்வதற்காக அவருடைய TVS ஸ்கூட்டி பெப் என்ற இருசக்கரவாகனத்தில் என்ஆர்டி நகரிலிருந்து புறப்பட்டு தேனியிலிருந்து பெரியகுளம் செல்லும் மெயின் ரோட்டில் சஞ்சீவி காபி பார் அருகில் வடக்கலிருந்து தெற்குநோக்கி வந்த பல்சர் இருசக்கரவாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. அப்போது நான் என் கடையில் இருந்தேன். இது சம்மந்தமாக அன்னலட்சுமி லாட்ஜின் ஊழியர்கள் எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார்கள். தகவல் கிடைத்தவுடன் நான் சம்பவ இடம் சென்றேன். அவருக்கு தலை, கை, வயிற்றில் காயம் இருந்தது. நான் உடனே க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை